செ.வெ.எண்.828 நாள். 2.10.2008

## செய்தி வெளியீடு

## திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதி காரம்பாக்கம் ஊராட்சி கிராமசபைக் கூட்டத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பங்கேற்பு .

ஒவ்வொரு ஆண்டும் தமிழக ஊராட்சிகளில் நான்கு முறை கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, இன்று (2.10.2008), உத்தமர் காந்தியடிகள் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழகம் முழுவதும் உள்ள 12,618 ஊராட்சிகளில் கிராம சபைக் கூட்டங்கள் நடைபெறுகிறது. அக்கூட்டத்தில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் சமூக தணிக்கை, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் துவக்கப்பட்ட பணிகள் மற்றும் அதன் முன்னேற்றங்கள், முழு சுகாதார இயக்கத்தின் பணிகள், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஊரக அடிப்படை வசதித் திட்டம் பற்றிய விபரங்கள், 2007–08 ஆம் ஆண்டிற்கான கிராம கணக்குகள் மற்றும் தணிக்கை, ஊராட்சித் தலைவர் எழுப்பும் இதர முக்கிய தலைப்புகளில் கலந்துரையாடல் நடைபெற்று ஊராட்சியின் வளர்ச்சிக்கு முக்கிய முடிவுகள் எடுக்கப்படுகிறது. இக்கூட்டத்தில் ஊராட்சித் தலைவர், பொதுமக்கள், அரசு சாரா அமைப்பைச் சார்ந்தவர்கள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள், ஊழியர்கள் பங்கேற்கின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள காரம்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள், எந்தவித முன்னறிவிப்புமின்றி, பொதுமக்களுடன் பொதுமக்களாக கலந்து கொண்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலர் திரு க.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் இராஜேந்திர குமார், இ.ஆ.ப., ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், கூட்டத்தில் பங்கேற்று, சென்ற முறை நடத்தப்பட்ட கிராம ஊராட்சியின் நடவடிக்கைக் குறிப்பை நேரடியாக ஆய்வு செய்ததுடன் 2007–08 ஆம் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட கிராம கணக்குகளை கேட்டார்கள்.

2007–08 ஆம் ஆண்டு கிராம கணக்கு தணிக்கை செய்யப்படாமலிருந்ததைக் கண்டறிந்து, சம்பந்தப்பட்ட அலுவலர் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள். இக்கூட்டத்தில், கட்சி வேறுபாடின்றி பங்கேற்ற பொதுமக்கள் தெரிவித்த அனைத்து கருத்துக்களையும் கேட்டறிந்தார்கள்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் சார்பில் கேட்டுக்கொண்டபடி, தகுதியுள்ள எஞ்சிய 27 சுய உதவிக்குழுக்களுக்கும் உடனடியாக சுழல் நிதி வழங்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதுடன், காரம்பாக்கம் – காந்தி நகர், அன்னை அஞ்சுகம் நகர் பகுதியில் நீண்டநாட்களாக தீர்க்கப்படாமல் உள்ள பட்டா தொடர்புடைய பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகாண, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியருக்கு அறிவுரை வழங்கினார்கள்.

மேலும், இக்கூட்டத்தில், பொதுமக்களால் கோரப்பட்டபடி செட்டியார் அகரம் பகுதியில் 3.5 கி.மீ. துூரத்திற்கு உள்ள ஒன்றிய சாலைகளை தார்ச்சாலையாக தரமான முறையில் உடனடியாக அமைத்திடவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில் நடைபெற்ற கலந்துரையாடலைக் கேட்டு, நிதர்சனமான உண்மைகளை அறிந்து, ஊராட்சிக்கு உடனடியாகத் தேவைப்படும் பணிகளுக்கு, நிதி ஆதாரங்களை உருவாக்குவதற்குரிய கருத்துக்களை வழங்கி, அவர்கள் இதுவரை செய்துள்ள பணிகளுக்கு பாராட்டு தெரிவித்து, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சிறப்புரையாற்றியமையை பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்.

‘வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9